सामान्य प्रशासन कार्यालय
GENERAL ADMINISTRATION OFFICE
31 JAN 2023
चेन्नै पत्तन प्राधिकरण
CHENNAI PORT AUTHORITY

# CHENNAI PORT AUTHORITY

## I & PR DIVISION

**Name of the news papers:** Makkal Kural **Date:** 26.1.23

**Page No.:** 4

**Col. :** 2

---

# சுற்றுலா கப்பல் போக்குவரத்து மூலம் சென்னை துறைமுகம் சிறப்பான வளர்ச்சி பெறும்

## சேர்மன் சுனில் பாலிவால் தகவல்

சென்னை, ஜன26–

சென்னை துறைமுகத்தில் 74வது குடியரசு தின விழா தண்டையார்பேட்டை பாபு ஜெகஜீவன் ராம் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவில் சென்னை துறைமுக சேர்மன் சுனில் பாலிவால் பங்கேற்று மத்திய பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தேசியக்கொடி ஏற்றி வைத்து சென்னை துறைமுகத்தின் சாதனைகள், வருங்கால திட்டங்கள், ஊழியர் நலன் திட்டங்கள் ஆகியவற்றை விவரித்தார்.

சென்னை துறைமுகத்தில் சுற்றுலா பயணி கப்பல்கள் வருகை மூலம் இதன் வளர்ச்சி அதிகரிக்கும். இதுவரை 85 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இதன் மூலம் சுற்றுலா கப்பலில் பயணித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். மத்திய துறைமுகம் கப்பல் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் சமீபத்தில் மிக உயரமான கொடி மரத்தை துவக்கி வைத்து தேசியக்கொடி ஏற்றியதை நினைவு கூர்ந்தார் அவர்.

சென்னை துறைமுகத்தின் அங்கமான மப்பேடு பகுதியில் உள்ள உலர் துறைமுகம் பணிகள் துவங்கி இரண்டு ஆண்டுக்குள் செயல்பட துவங்குவதால் இதன் மூலம் சென்னை துறைமுக வருவாய் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டத்தில் உள்ள சென்னை துறைமுகத்தையும், மதுரவாயல் பைபாஸ் சாலையும் இணைக்கும் 18 கி.மீ. நீளம் உள்ள மதுரவாயல் அடுக்கு மேம்பாலம் பணிகள் விரைவில் துவங்க உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சுனில் பாலிவால் மேலும் பேசுகையில், சென்னை துறைமுக



வளர்ச்சி மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு இதன் ஊழியர்கள் பங்கேற்பது ஒரு அர்ப்பணிப்பு ஆகும். இந்தியாவை ஒரு பிரம்மாண்ட வளர்ச்சி பெற்ற நாடாக உருவாக்குவது நம் ஊழியர்களின் கடமை என்றார் அவர்.

சென்னை துறைமுகத்தின் துணைத் தலைவர் எஸ். பாலாஜி அருண்குமார், தலைமை ஊழல் தடுப்பு கண்காணிப்பு அதிகாரி எஸ். முரளி கிருஷ்ணன் மற்றும் சென்னை துறைமுக ட்ரஸ்டிகள், தொழிலாளர் சங்க தலைவர்கள், துறைமுக உபயோகிப்பாளர்கள், சென்னை துறைமுகத்தின் பல்வேறு துறை தலைவர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.



## அண்ணா நகர் மசூதியில் குடியரசு தின விழா: